முழுப் பதிப்புரிமையுடையது.

SRI LANKA

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் II பரீட்சை – 2026 சனவரி

## (204) வணிக முகாமைத்துவம்

2025-02-08
பிற்பகல்
01.45 – 05.00]

பக்கங்கள் : 07
வினாக்கள் : 07

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு – 15 நிமிடங்கள்*
*விடையெழுத – 03 மணித்தியாலங்கள்*

(2) ***சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) *வழங்கப்பட்டுள்ள* ***விடைப் புத்தகத்தில்*** *நீங்கள் விண்ணப்பித்த* ***மொழி மூலத்திலேயே விடைகள்*** *எழுதப்படல் வேண்டும்.*

(4) *ஏதாவது எடுகோள்களை நீங்கள் மேற்கொண்டிருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப் பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு* ***செயல் வினைச் சொல்லை*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் செவ்வை நிரலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(6) *100 புள்ளிகள்*

---

## <u>பகுதி A</u>

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 01

*இல. **1.1** தொடக்கம் **1.5** வரையான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க. தெரிவு செய்யப்பட்ட விடையின் இலக்கத்தை அதற்குரிய வினா இலக்கத்துடன் உமது விடைப் புத்தகத்தில் எழுதுக.*

**1.1** பின்வருவனவற்றில் எது "முகாமைத்துவம்" என்பதைச் சிறப்பாக வரையறுக்கிறது?

(1) தனிப்பட்ட இலக்குகளை அடைவதற்கு அனைத்துப் பொறுப்புக்களையும் கீழ்நிலை அலுவலர்களுக்குக் கையளிக்கின்ற செயன்முறை.

(2) நிறுவன இலக்குகளையும் நோக்கங்களையும் அடைவதற்கு மக்கள் ஊடாக விடயங்களை வினைத்திறனாகவும் பயனுறுதிமிக்கதாகவும் செய்து முடிக்கின்ற ஒரு கலை.

(3) நாளாந்தச் செயற்பாடுகளைக் கருத்திற் கொள்ளாமல் நீண்ட கால நிறுவன இலக்குகளைத் திட்டமிடுகின்ற செயல்.

(4) நிறுவன இலக்குகளில் கவனஞ் செலுத்தாது, பணியாளர்களை மேற்பார்வையிடுகின்ற செயன்முறை.

**1.2** இலக்குகள் மற்றும் நோக்கங்களை அடைவதில் குறைந்தபட்ச வளங்களைப் பயன்படுத்தி, உயர்ந்தபட்ச வெளியீடுகளைப் பெற்றுக்கொள்வது :

(1) வினைத்திறன் ஆகும். (2) உற்பத்தித்திறன் ஆகும்.

(3) பயனுறுதித்தன்மை ஆகும். (4) தலைமைத்துவம் ஆகும்.

**1.3** பின்வருவனவற்றில் எது மனித வள மிகைக்கான ஒரு தந்திரோபாயம் **அல்ல**?

(1) பணி நீக்கம்.
(2) பணி முடிவுறுத்தல்.
(3) உப ஒப்பந்தங்களை வழங்குதல்.
(4) ஓய்வூதியங்கள்

**1.4** வணிகச் செயற்பாடுகளில் செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் இயந்திரக் கற்றல் (ML) ஆகியவற்றின் தாக்கத்தை பின்வருவனவற்றில் எது சிறப்பாக விபரிக்கிறது?

(1) அவை ஒவ்வொரு தொழிற்றுறையிலும் உள்ள அனைத்து மனிதப் பணியாளர்களுக்கும் மாற்றாக (replace) உள்ளன.

(2) அவை செயன்முறைகளை உகந்ததாக்குவதற்கும், உள்ளீட்டு பொருள்களின் பாவனையைக் குறைப்பதற்கும், வினைத்திறனை மேம்படுத்துவதற்கும் தொழிற்றுறைகளை அனுமதிக்கின்றன.

(3) அவை திட்டமிடல் மற்றும் கட்டுப்படுத்தல் போன்ற முகாமைத்துவத் தொழிற்பாடுகளுக்கான தேவையை நீக்குகின்றன.

(4) அவை பொழுதுபோக்கு மற்றும் சமூக ஊடகப் பயன்பாடுகளுக்கான கருவிகளாக மாத்திரம் செயல்படுகின்றன.

**1.5** பின்வருவனவற்றில் மொத்தத் தர முகாமைத்துவத்தின் (TQM) ஓர் அனுகூலமாக அமைவது எது?

(1) போட்டி நிலைமைகள் வலுப்படுதல்.
(2) உற்பத்தித்திறன் அதிகரித்தல்.
(3) ஊழியர்களின் மனவுறுதி மேம்படுதல்.
(4) மேற்கூறிய யாவும்.

(02 புள்ளிகள் வீதம், 10 புள்ளிகள்)

*வினா இல. **1.6** தொடக்கம் **1.10** வரை உள்ள இடைவெளிகளை நிரப்புவதற்கு, அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ள சொல் / சொற்களைத் தேர்ந்தெடுக்கவும். வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட சொல் / சொற்களை உங்கள் விடைப் புத்தகத்தில் எழுதவும்.*

**1.6** குறிப்பிட்ட பணிகளை ஆற்றுவதற்குத் தேவையான ஆற்றல்களும் அறிவும் ............ *(எண்ணக்கருத் / தொழினுட்பத்)* திறன்கள் எனப்படுகின்றன.

**1.7** ............ *(ஒருமுகப்படுத்தல் / படிநிலை)* என்பது ஹென்றி பயாலின் கருத்தின்படியான ஒரு அடிப்படை முகாமைத்துவக் கோட்பாடாகும்.

**1.8** ............ *(தேவைப் படிநிலைக் கோட்பாடு / இரு காரணிக் கோட்பாடு)* இன்படி, ஊழியர்கள் உடலியல் தேவைகளில் தொடங்கி, சுய – உணர்தல் தேவைகளை நோக்கி நகரும் தொடர்ச்சியான மனிதத் தேவைகளைத் திருப்திப்படுத்த ஊக்கப்படுத்தப்படுகிறார்கள்.

**1.9** தவறான விளம்பரப்படுத்தலைத் தவிர்ப்பது மற்றும் போட்டியாளர்கள் பற்றிய தவறான தகவல்களைத் தவிர்ப்பது என்பன ............ *(நெறிமுறையான / நிதிசார்ந்த)* அம்சங்கள் ஆகும்.

**1.10** ............ *(திட்டமிடப்பட்ட / படிமுறை)* மாற்றத்தில், நிறுவனமானது ஸ்திரத்தன்மையான மற்றும் முன்கணிப்புச் செய்யக்கூடிய சூழலில் இயங்குகிறது எனக் கருதி, சூழலைப் பகுப்பாய்வு செய்த பின்னர் திட்டங்கள் உருவாக்கப்படுகின்றன. (01 புள்ளி வீதம், 05 புள்ளிகள்)

*இல. **1.11** தொடக்கம் **1.15** வரையான வினாக்களுக்கான விடைகளை, உமது விடைப் புத்தகத்தில் வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதற்கு எதிரே எழுதவும்.*

**1.11** ஒரு வெற்றிகரமான பண்டக்குறிக்கான (brand) தேவைகள் இரண்டைக் (02) குறிப்பிடுக.

**1.12** அதிகாரத்துவ முகாமைக் கோட்பாட்டின் இரண்டு (02) பண்புகளைக் (characteristics) குறிப்பிடுக.

**1.13** மனித வள முகாத்துவத்தில் உள்ள பயிற்சியின் இரண்டு (02) பொதுவான முறைகளைக் குறிப்பிடுக.

**1.14** "சந்தைப்படுத்தல் முகாமைத்துவம்" என்றால் என்ன என்பதைச் சுருக்கமாக விபரிக்குக.

**1.15** "மனித வள முகாமைத்துவத்தின் இரட்டைப் பொறுப்பு (Dual Responsibility)" என்பதாற் கருதப்படுவது யாதெனச் சுருக்கமாக விபரிக்குக.

(02 புள்ளிகள் வீதம், 10 புள்ளிகள்)
(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## பகுதி B

(மொத்தம் 50 புள்ளிகள்)

### வினா 02

**வரையறுக்கப்பட்ட டெக் சொலூசன்ஸ் (தனியார்) கம்பனியானது** ஒரு தகவல் தொழினுட்ப சேவை வழங்குநராகும். இது சுகாதாரப் பராமரிப்புத் துறைக்கான மொபைல் செயலிகளை உருவாக்குவதற்குத் திட்டமிடுகிறது. இதற்காக முகாமைத்துவ அணியானது, பின்பற்ற வேண்டிய தொழினுட்ப வகை, ஒதுக்கீடு செய்யப்பட வேண்டிய வளங்கள் ஆகியன பற்றிய பல தீர்மானங்களை எடுத்தல் வேண்டும். இந்தத் தீர்மானங்களுக்கு பகுத்தறிவான (rational) தீர்மானமெடுத்தல் அணுகுமுறையைப் பயன்படுத்தி மாற்றுவழிகளைக் கவனமாக மதிப்பீடு செய்வது அவசியமானதாகும். கம்பனி வளர்ந்து வரும் ஒரு நிறுவனமாக இருப்பதால், தெளிவான குறிக்கோள்களை நிர்ணயிப்பதற்கும், எதிர்கால வாய்ப்புகளுடன் வளங்களை ஒருங்கிணைப்பதற்கும் பயனுறுதிவாய்ந்த திட்டமிடலின் முக்கியத்துவத்தை முகாமையாளர்கள் வலியுறுத்துகின்றனர்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) பகுத்தறிவான தீர்மானமெடுத்தல் செயன்முறையின் படிமுறைகளைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(b) திட்டமிடலானது **வரையறுக்கப்பட்ட டெக் சொலூசன்ஸ் (தனியார்) கம்பனியின்** தீர்மானமெடுத்தல் செயன்முறையில் எவ்வாறு உதவுகிறது என்பதை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(c) நான்கு (04) திட்டமிடல் கோட்பாடுகளைக் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 03

**வரையறுக்கப்பட்ட பிறைட்டெக் கம்பனியில்,** நீண்ட வேலை மணித்தியாலங்கள் மற்றும் இறுக்கமான காலக்கெடு போன்ற காரணங்களால் ஊழியர்களின் மனவுறுதி குறைந்து வருவதை அதன் மனித வள முகாமையாளர் அவதானித்தார். குழுவினரை ஊக்குவிக்க, அவர் நெகிழ்வான நேர அட்டவணைகள், அங்கீகார நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் குழுவாகக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளை அறிமுகப் படுத்தினார். எவ்வாறாயினும், விரைவான தொழினுட்ப மாற்றங்கள், போட்டி, மற்றும் அதிகரித்துவரும் வாடிக்கையாளர் எதிர்பார்ப்புகள் போன்ற சவால்களை அவர் எதிர்கொண்டார். போட்டியை எதிர்கொள்வதற்காக, சமூக ஊடகங்கள் மூலமான சந்தைப்படுத்தல் தந்திரோபாயங்களில் கம்பனி கவனஞ் செலுத்தியதுடன், வாடிக்கையாளர்களை ஈர்க்கவும், தக்கவைத்துக் கொள்ளவும் விநியோக வழிமுறைகளை விரிவாக்கக் கம்பனி திட்டமிட்டுள்ளது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) **வரையறுக்கப்பட்ட பிறைட்டெக் கம்பனிக்கு** ஊக்கப்படுத்தல் ஏன் முக்கியமானது என்பதற்கான மூன்று (03) காரணங்களை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) **வரையறுக்கப்பட்ட பிறைட்டெக் கம்பனி** அதன் போட்டி நிலையை மீளவும் பெற அது டிஜிடல் சந்தைப்படுத்தலை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை இரண்டு (02) வழிகளில் **விபரிக்குக.**
(04 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 04

**வரையறுக்கப்பட்ட சில்வர்லைன் கம்பனியின்** பிரதம நிறைவேற்று அதிகாரி (CEO), கம்பனியில் உள்ள வகிபாகங்கள், அறிக்கையிடல் வரிசைகள் மற்றும் தொடர்பாடல் வழிமுறைகள் ஆகியவற்றைத் தெளிவாக வரையறுக்க, ஒரு புதிய நிறுவனக் கட்டமைப்பை அறிமுகப்படுத்தினார். இது பிரிவுகளுக்கிடையிலான சிறந்த ஒருங்கிணைப்புக்கு வசதியேற்படுத்தியது. செயற்பாட்டு முகாமையாளர் உற்பத்தி நடவடிக்கைகளின் திட்டமிடல், ஒழுங்கமைத்தல், மற்றும் மேற்பார்வை செய்தல் ஆகியவற்றின் மீது கவனஞ் செலுத்தினார். செயற்பாட்டு முகாமைத்துவமானது (Operations management) வணிகம் அதன் வெற்றியை நோக்கி வழிப்படுத்தப்படுவதில் முக்கிய வகிபாகத்தை ஆற்றுகிறது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) **வரையறுக்கப்பட்ட சில்வர்லைன் கம்பனிக்கு** நல்ல நிறுவனக் கட்டமைப்பால் ஏற்படும் நான்கு (04) நன்மைகளைக் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(b) **வரையறுக்கப்பட்ட சில்வர்லைன் கம்பனியின்** வெற்றிக்கு, செயற்பாட்டு முகாமைத்துவம் ஏன் முக்கியமானது என்பதற்கான இரண்டு (02) காரணங்களை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(c) **வரையறுக்கப்பட்ட சில்வர்லைன் கம்பனி** கட்டச்சங்கிலியைப் (blockchain) பயன்படுத்துவதன் இரண்டு (02) அனுகூலங்களைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

**நோவா டெக்ஸ்டைல்ஸ்** இல், மனித வள முகாமைத்துவ அணியானது ஊழியர்களின் ஆட்சேர்ப்பு, பயிற்சி, மற்றும் செயற்றிறன் மதிப்பீடுகளைக் கையாள்வதுடன் ஊழியர்களின் திறன்களை கம்பனியின் இலக்குகளுடன் இணைக்கிறது. எவ்வாறாயினும், முகாமையானது புதிய டிஜிடல் முறைமைகளை அறிமுகப்படுத்தியபோது, சில ஊழியர்கள் மாற்றத்தை எதிர்த்தனர். எதிர்ப்பைக் குறைப்பதற்கு முகாமையானது பல்வேறு வழிமுறைகளை அறிமுகப்படுத்தத் திட்டமிடுகிறது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) “வேலை விபரிப்பு (a Job Description)” மற்றும் “வேலை விவரணம் (a Job Specification)” ஆகியவற்றிற்கிடையிலான வேறுபாட்டை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(b) **நோவா டெக்ஸ்டைல்ஸ்** இற்கு பயனுறுதிமிக்க செயற்றிறன் மதிப்பீட்டு முறைமை ஏன் முக்கியமானது என்பதற்கான இரண்டு (02) காரணங்களை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(c) **நோவா டெக்ஸ்டைல்ஸ்** இன் ஊழியர்கள் மாற்றத்திற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்கான மூன்று (03) காரணங்களைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

**வரையறுக்கப்பட்ட ஸெனித் கம்பனியின்** பிரதம நிறைவேற்று அதிகாரி (CEO), சர்வதேச சந்தைகளில் வணிகத்தை விரிவுபடுத்துவதற்கான நீண்டகால தந்திரோபாயத்தை உருவாக்கி, முதலீடு மற்றும் உற்பத்தி வடிவமைப்பு குறித்த தீர்மானங்களை வழிநடத்தினார். **வரையறுக்கப்பட்ட ஸெனித் கம்பனியின்** செயற்றிட்டத் தலைவர் ஊழியர்களை ஒரு தொலைநோக்குப் பார்வையுடன் ஊக்குவிப்பதுடன் புதுமைகளை ஊக்குவிக்கிறார். அதே வேளை உற்பத்தி முகாமையாளர் அட்டவணைகளைத் திட்டமிடுதல், வளங்களை ஒதுக்கீடு செய்தல், மற்றும் காலக்கெடுவைப் பூர்த்தி செய்வதில் கவனஞ் செலுத்தினார். செயற்றிட்ட நடைமுறைப்படுத்தலின்போது, செயற்றிறனைக் கண்காணித்தல் மற்றும் வழுக்களைச் சரிசெய்தல் போன்ற கடுமையான கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் பிரயோகிக்கப்பட்டன. கட்டுப்பாடுகள் மிகவும் கண்டிப்பானதாகக் கருதப்படும்போது, முகாமையானது நடத்தைசார் தாக்கங்களையும் எதிர்கொண்டது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) நிறுவனங்கள் பயன்படுத்துகின்ற இரண்டு (02) தீவிர (intensive) தந்திரோபாயங்களை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(b) “உருமாற்றத் (transformational) தலைமைத்துவம்” மற்றும் “செயல்வினைத் (Transactional) தலைமைத்துவம்” ஆகியவற்றிற்கிடையிலான வேறுபாட்டை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(c) **வரையறுக்கப்பட்ட ஸெனித் கம்பனி,** கட்டுப்படுத்தலில் கவனத்திற் கொள்ள வேண்டிய மூன்று (03) காரணிகளைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# பகுதி C

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 07

உலகளாவிய நோய்த்தொற்றின் கடுமையான தாக்கத்துடன், பல ஆண்டுகளாக நாட்டில் நிலவிய பொருளாதார மற்றும் அரசியல் ஸ்திரமின்மைக்குப் பிறகு, இலங்கையின் விருந்தோம்பல் தொழிற்றுறை படிப்படியாக மீண்டு வருகிறது. புகழ் பெற்ற **மூன் ஹோட்டல்ஸ் பீ.எல்.சீ.** ஆனது ஏற்ற, இறக்கமான சுற்றுலாப் பயணிகளின் வருகை, அதிகரித்த போட்டி மற்றும் உயர்வான செயற்பாட்டுக் கிரயங்களை அனுபவித்திருந்தது. இந்தச் சவால்களைச் சமாளிக்கவும் புதிய வாய்ப்புகளைக் கைப்பற்றவும் கம்பனி அதன் வணிக நடைமுறைகளை மீள் - மதிப்பீடு செய்யத் தொடங்கியது.

ஊழியர்களை நிச்சயமற்ற தன்மையிலிருந்து வழிநடத்தி, குழுக்களாக ஊக்குவிக்கவும் அனைவரும் பொதுவான நிறுவன இலக்குகளை நோக்கிச் செயற்படுவதை உறுதி செய்யவும் **மூன் ஹோட்டல்ஸ் பீ.எல்.சீ.** இற்கு தலைமைத்துவத் திறன்களைக் கொண்ட ஒரு வலுவான தலைமைத்துவம் அவசியமாகும். அதே வேளை, சந்தைப்படுத்தல் பிரிவு பண்டக்குறி பற்றிய விழிப்புணர்வைக் கட்டியெழுப்புதல், விழுமியங்கள் (values) பற்றித் தெரிவித்தல், வாடிக்கையாளர் உறவுகளைப் பேணுதல் ஆகியவற்றின் மூலம் உள்நாட்டு மற்றும் சர்வதேச சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதில் முக்கிய வகிபாகத்தை ஆற்றுகிறது.

எவ்வாறாயினும், செயற்பாடுகளை விரிவாக்குவதற்கான அதன் ஆர்வத்தில், கம்பனி சமீபத்தில் பல மோசமான ஆட்சேர்ப்புத் தீர்மானங்களை எடுத்திருந்தது. இது ஊழியர்களின் திறன்கள் மற்றும் வேலைத் தேவைகளுக்கு இடையில் பொருந்தாத தன்மையை ஏற்படுத்துகிறது. இது வணிகச் செயற்பாடுகளில் பல எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. இதிலிருந்து பாடத்தைக் கற்றுக்கொண்ட மனித வளப் பிரிவானது தற்போது முறையான தேர்வு நடைமுறைகளின் முக்கியத்துவத்தை ஏற்பிசைவு செய்கிறது.

நிறுவனத்தின் நீண்ட கால வெற்றியை உறுதி செய்வதற்காக, முகாமையானது ஒரு தந்திரோபாயத் திட்டத்தையும் வகுத்து வருகிறது. நன்கு வடிவமைக்கப்பட்ட தந்திரோபாயம் மாத்திரமே கொந்தளிப்பான சூழலில் **மூன் ஹோட்டல்ஸ் பீ.எல்.சீ.** இன் நீடித்திருக்கத்தக்க போட்டித்தன்மைக்கு உதவும் என்பதை அவர்கள் புரிந்து கொண்டுள்ளார்கள்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) நவீன யுகத்தில் ஒரு தலைவருக்குத் தேவையான மூன்று (03) தலைமைத்துவச் சிறப்புக் காரணிகளைக் (leadership excellence factors) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(b) **மூன் ஹோட்டல்ஸ் பீ.எல்.சீ.** இல் ஒரு தலைவர் ஆற்ற வேண்டிய மூன்று (03) முக்கிய வகிபாகங்களை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(c) **மூன் ஹோட்டல்ஸ் பீ.எல்.சீ.** இற்கு பயனுறுதிவாய்ந்த சந்தைப்படுத்தல் ஏன் முக்கியமானது என்பதற்கான மூன்று (03) காரணங்களை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(d) **மூன் ஹோட்டல்ஸ் பீ.எல்.சீ.** தொடர்பில், தவறான ஊழியர் தெரிவுத் தீர்மானத்தின் நான்கு (04) விளைவுகளைக் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(e) **மூன் ஹோட்டல்ஸ் பீ.எல்.சீ.** அதன் இலக்குகளை அடைவதற்கு தந்திரோபாயத் திட்டம் எவ்வாறு உதவும் என்பதை மூன்று (03) வழிகளில் **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |